4. தேசிய இனம் :--------.

5. பிறப்பால் இலங்கைப் பிரஜையா ? அல்லது பதிவாலா ? : --------.
(பதிவாக இருந்தால் அத்தாட்சிப்பத்திரம் இணைக்கவும்.)

6. பிறந்த திகதி :--------.

7. வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட விண்ணப்பம் பெறும் முடிவுத் திகதியன்று வயது :--------.

8. கல்வித் தகைமைகள் (பரீட்சை சான்றிதழ்கள் இணைக்கவும்) : --------.

9. வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட (5), (6) பிரிவுகளில் குறிப்பிடப் பட்ட தகைமைகள் :--------.

10. உங்களைப் பற்றிய விபரங்களைத் தரக்கூடிய இரு முக்கியஸ் தர்கள் பெயரும் விலாசமும் :-

(i)
(ii)

11. நீங்கள் அரச/உள்நாட்டு சேவையில் முன்னர் பதவி வகித்திருந் தால் அது தொடர்பான விபரங்களைத் தருக :--------.

என்னால் மேற்குறிப்பிட்ட விபரங்கள் யாவும் எனது அறிவுக்கு எட்டியவரை உண்மையானதும், சரியானதும் என உறுதிமொழிகிறேன். இந்த விபரங்கள் பொய்யானதும், பிழையானதும் என சேவைக்கு அமர்த்தப்பட்ட பின்னர் அறியப்பட்டால் எந்தவித நட்டஈடுகளும் இன்றி சேவையில் இருந்து நீக்கப்படுவேன் என்று நான் அறிவேன்.

--------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :--------.

1-319

---

## ஆயுர்வேத திணைக்களம்

### இலங்கை ஆயுர்வேத திணைக்களத்திற்கான ஆட்சேர்ப்பு

பொதுச்சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களுக்கு அமைய 01.02.2008 ஆந் திகதியன்று கீழே குறிப்பிடப்பட்ட தேவைகளைப் பூர்த்திசெய்துள்ளவர்களிடமிருந்து ஆயுர்வேத திணைக்களத்தின் மருத்துவ அலுவலர்கள் வகுதியின் ஆரம்ப தர மருத்துவ அலுவலர்கள் பதவிக்கான இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் கீழே உள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்துக்கு அமைய A4 அளவுடைய தாள் ஒன்றில் தயாரிக்கப்பட்டு 01.02.2008 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் "மகரகம, நாவின்ன ஆயுர்வேத திணைக்களத்தின் ஆயுர்வேத ஆணையாளருக்கு" முகவரியிட்டு பதிவுத்தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பங்கள் உள்ளடக்கப்படுகின்ற கடித மேலுறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவைப் பதவிகள்" என்ற சொற்றொடர் எழுதப்படல் வேண்டும்.

1. **சம்பள அளவுத்திட்டம்.-** பட்டதாரிகளுக்கு அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 6/2006 இற்கு அமைய ரூபா 3,13,920-4x2,500-3,29,400.

2. **வயது எல்லை.-** 01.02.2008 ஆந் திகதியன்று 18 வயதுக்கு குறையாதும் 40 வயதுக்கு மேற்படாதும் இருத்தல் வேண்டும்.

3. **கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் :**

(அ) இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) அங்கீகாரம்பெற்ற பல்கலைக்கழகம் ஒன்றில் 5 வருட ஆயுர்வேத/சித்த/யுனானி பட்டம் ஒன்றைப் பெற்றதன் பின்னர் ஒரு வருட உள்ளகப் பயிற்சியைப் பூர்த்திசெய்துள்ளதுடன் ஆயுர்வேத மருத்துவச் சபையில் பதிவுசெய்யப்பட்ட ஓர் மருத்துவராக இருத்தல் வேண்டும் ;
அத்துடன்

(இ) சிறந்த குண இயல்பையும் சிறந்த உடல் வலுவையும் சிறந்த கண் பார்வையையும் பெற்றிருத்தல் வேண்டும்.

4. **சேவை நிபந்தனைகள்.-** இப்பதவியானது நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உரித்துடையதுமாகும். தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் விதவைகள்/தபுதாரர்கள்/ அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும். இந்நியமனம் மூன்று வருட தகுதிகாண் நிலை காலத்திற்கு உட்பட்டிருக்கும்.

5. **பதவி உயர்வு.-** ஆரம்ப தரப் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டதன் பின்னர் பதவி உயர்வுகள் இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவைப் பிரமாணத்தில் உள்ள சேவை நியதிகள் நிபந்தனைகள் என்பவற்றின் இணக்கத்திற்கு அமைய மேற்கொள்ளப்படும்.

**குறிப்பு.-** (அ) 01.02.2008 ஆந் திகதியன்று ஆட்சேர்ப்புத் திட்டத்தில் உள்ள சகல தகைமைகளையும் பூர்த்திசெய்த ஆயுர்வேத/சித்த/யுனானி பட்ட இறுதிப் பரீட்சையில் தேறி முதலில் வெளியேறிய அணித்தொகுதியிலுள்ள அரச சேவையில் ஆட்சேர்ப்பு செய்யப்படாத சுதேச வைத்தியர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாகப் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் திறமை அடிப்படையில் தற்போதுள்ள பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டதன் பின்னர் ஆயுர்வேத/சித்த/யுனானி பட்டதாரி மருத்துவ அலுவலர்களின் ஏனைய அணித்தொகுதியினர் அவர்கள் பரீட்சையில் சித்தியெய்திய காலக்கணிப்பு முறைக்கு அமைய மேலே கூறப்பட்ட திறமையின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படுவர்.

(ஆ) மேற்குறிப்பிட்ட ஆட்சேர்ப்புத் திட்டம் தீர்வு (ஆய்வுமுறையில்) போன்றவற்றுக்கு எதிராக இன்னொரு தீர்மானத்தை அமைச்சரவை எடுக்குமிடத்து அமைச்சரவையால் அத்தகைய தீர்மானமே மேற்கூறப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் தீர்வு போன்றவற்றைவிட வலுப்பெறும்.

(இ) ஆயுர்வேத/சித்த/யுனானி தரத்தில் தற்போதுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை பின்வருமாறு :-

| *ஆயுர்வேத* | *சித்த* | *யுனானி* |
|---|---|---|
| 212 | 73 | 33 |

6. விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சை ஒன்றின் மூலம் தேர்வு நோக்கத்திற்காக ஏற்படுத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைச் சபையொன்றின் தகைமைச் சான்றுப்படுத்தலின் பின்னர் தெரிவுசெய்யப்படுவார்கள்.

7. தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் தீவின் எப்பாகங்களிலும் சேவையாற்றுவதற்கு தயாராக இருத்தல் வேண்டும்:-

